இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 05

இறுதிப் பரீட்சை - 2023

**SNU 5244/ESU3144** – கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 05.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. உங்கள் சொந்த நடையில் "கலைத்திட்டத்தை" வரையறுக்குக.
2. கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரிகளின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக ஆராய்க.
3. இரண்டு (02) உதாரணங்களை மேற்கோள் காட்டி, மறைக் கலைத்திட்டம் என்றால் என்ன என்பதை விளக்குக.
4. கலைத்திட்டத்திற்கும் பாடத்திட்டத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் என்ன?
5. பொருத்தமான உதாரணங்களைத் தருவதன் மூலம் கிடை கலைத்திட்ட ஒழுங்கமைப்பை குத்து கலைத்திட்ட ஒழுங்கமைப்பிலிருந்து வேறுபடுத்துக.
6. ஹன்தஸ்ஸ கல்வி முறைமையில் **இரண்டு** (02) நோக்கங்களைக் குறிப்பிடுக.
7. பாட உள்ளடக்கத்தைத் தேர்ந்தெடுப்பதில் தீர்மானிக்கும் **ஐந்து** (05) அடிப்படைகளை பட்டியலிடுக.
8. இந்தியாவில் கல்வி வளங்கள் மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் வெளியிட்ட **ஆறு** (06) கலைத்திட்ட ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை வரைந்து விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியில் உள்ள மூன்று (03) பலவீனங்களைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

THE OPEN UNIVERSITY OF SRI LANKA

FACULTY OF EDUCATION

BACHELOR OF EDUCATION HONOURS IN SPECIAL NEEDS EDUCATION DEGREE PROGRAMME - 2022/2023 - LEVEL - 05

FINAL EXAMINATION – 2023

SNU5244/ESU3144 – CURRICULUM THEORY AND PRACTICE

DURATION – THREE (03) HOURS

Date: 05.11.2023 Time: 01.30 p.m. – 04.30 p.m.

**Answer All Questions in Part I and any three (03) questions from Part II.**

## PART - I

01. Define 'curriculum' in your own words.

02. Discuss in brief the importance of curriculum development models.

03. Citing **two (02)** examples, explain what is meant by hidden curriculum.

04. What are the basic differences between syllabus and curriculum?

05. Differentiate horizontal curriculum organization from vertical curriculum organization by giving appropriate examples.

06. Mention **two (02)** objectives in Handessa education system.

07. List out **five (05)** basic determinants in selecting subject content.

08. Mention **six (06)** curriculum organization principles published by the National Council for Educational Resources and Training in India.

(5 x 8 = 40 marks)

## PART - II

09. i. Draw and explain the Tyler's curriculum development model. (06 marks)

ii. Mention **three (03)** weaknesses in the Tyler's curriculum development model. (06 marks)

iii. Explain the Wheeler's model and explain how these weaknesses have been overcome in the Wheeler's model. (08 marks)

**iii.** வீலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை விளக்கி, டைலரின் மாதிரியில் உள்ள பலவீனங்கள் வீலரின் மாதிரியில் எவ்வாறு சரி செய்யப்பட்டுள்ளன என்பதை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

10.

**i.** கலைத்திட்ட முகாமைத்துவம் என்றால் என்ன?

**(04 புள்ளிகள்)**

**ii.** கலைத்திட்ட முகாமைத்துவத்தில் **ஐந்து** (05) படிநிலைகளைக் குறிப்பிடுக. உங்கள் பாடசாலைச் சூழலில் இந்த படிநிலைகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை கலைத்திட்டத்தை நிர்வகிப்பதில் பாடசாலை அதிபரின் வகிபங்கின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக ஆராய்க.

**(11 புள்ளிகள்)**

11.

**i.** கலைத்திட்ட மதிப்பீடு என்றால் என்ன என்பதை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** உங்கள் பாடசாலைச் சூழலில் கலைத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் / கூறு தொடர்பான பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி, டைலரின் குறிக்கோள் அடிப்படையிலான கலைத்திட்ட மதிப்பீட்டு மாதிரியில் உள்ள படிகளைப் பற்றி ஆராய்க.

**(14 புள்ளிகள்)**

**iii.** கலைத்திட்ட மதிப்பீட்டாளரிடம் இருக்க வேண்டிய **ஐந்து** (05) குணங்களைச் சுருக்கமாக மதிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

12.

**i.** "பாடசாலை கலைத்திட்டத்தை உருவாக்கும் போது உளவியல் அடிப்படைகளை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்"

மூன்று (03) காரணங்களை வழங்கி இக்கூற்றை நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**ii.** பாடசாலை கலைத்திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கமைப்பதில் பியாஜேயின் உளவியல் கருத்துக்களின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் விசேட தேவைகளுக்கான கல்வி கலைத்திட்டம் / கலைத்திட்டக் கூறுகளைத் திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கமைப்பதில் இந்த கருத்துக்கள் எந்த அளவிற்குக் கருதப்பட்டன. என்பதை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

10. i. What is meant by curriculum management? (04 marks)

ii. Name **five (05)** stages in curriculum management. Briefly explain how these stages are managed in your school context. (10 marks)

iii. Discuss briefly the importance of the role of the school principal in managing the school curriculum. (06 marks)

11. i. What is meant by curriculum evaluation? (03 marks)

ii. Discuss the steps in Tyler's objective based curriculum evaluation model citing appropriate examples related to a curriculum programme/component in your school context. (14 marks)

iii. Evaluate in brief **five (05)** qualities to be possessed by a curriculum evaluator. (03 marks)

12. i. "Psychological foundations should be considered when developing a school curriculum'

Justify this statement providing **three (03)** reasons. (06 marks)

ii. Discuss the importance of Piaget's psychological ideas in planning and organizing a school curriculum. (06 marks)

iii. Examine the extent which has been considered those ideas in planning and organizing a special needs education curriculum/curriculum component in Sri Lanka. (08 marks)

13. i. Explain in brief what is meant by 'social change' (04 marks)

ii. Examine the importance of the fulfillment of social needs as an objective of school curriculum. (08 marks)

iii. Discuss how social changes influence on school curriculum by giving **four (04)** appropriate examples from different education reforms in Sri Lanka over the years. (08 marks)

14. i. List out **four (04)** patterns or approaches in curriculum organization (04 marks)

ii. Describe in brief the nature, salient characteristics and the weaknesses of one of those approaches. (12 marks)

iii. Evaluate the impact of that approach in organizing the existing school curriculum in Sri Lanka. (04 marks)

*-Copyrights reserved-*

13.

**i.** "சமூக மாற்றம்" என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** பாடசாலைக் கலைத்திட்டத்தின் நோக்கமாக சமூக தேவைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை பரீட்சிக்க.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் பல ஆண்டுகளாக முன்வைக்கப்பட்ட பல்வேறு கல்விச் சீர்திருத்தங்களில் இருந்து நான்கு (04) பொருத்தமான உதாரணங்களை வழங்குவதன் மூலம் சமூக மாற்றங்கள் எவ்வாறு பாடசாலை கலைத்திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றி ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

14.

**i.** கலைத்திட்ட அமைப்பில் நான்கு (04) கோலங்கள் அல்லது அணுகுமுறைகளை பட்டியலிடுக.

**(04 புள்ளிகள்)**

**ii.** இந்த அணுகுமுறைகளில் ஒன்றின் தன்மை, முக்கிய பண்புகள் மற்றும் பலவீனங்களைச் சுருக்கமாக விவரிக்க.

**(12 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் தற்போதுள்ள பாடசாலை கலைத்திட்டத்தை ஒழுங்கமைப்பதில் அந்த அணுகுமுறையின் தாக்கத்தை மதிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -